# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 87/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-6 | Village: | |
| Name | : காசிலிங்கம் | Age | : |
| Father's/Husband's Name | :முனியன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/06/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது சோழபுரம், புதுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்கள் யாருடையது என்று எனக்கு தெரியவில்லை. நான் சோழபுரம் புதுத்தெரு காளியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது, போலிசார் அங்கு விசாரித்து கொண்டிருந்தார்கள். நான் சென்று பார்த்தேன். என்னை அழைத்து ஒரு கையொப்பம் வாங்கி கொண்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 17/03/2011 அன்று காலை 10.00 மணியளவில் நானும், மகாலிங்கம் என்பவரும்

சோழபுரம் புதுத்தெரு காளியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது, திருப்பனந்தாள் போலிசார் முன்தினம் இரவு ரமேஷ் என்பவருக்கும், பாஸ்கர் என்பவருக்கும் அங்கு நடந்த சண்டை சம்மந்தமாக விசாரணை செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து பார்வை மகசரில் எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1,3 எதிரிகள் சார்பில் அவரது வழக்கறிஞர் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 87/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-5 | Village: | |
| Name | : மகாலிங்கம் | Age | : |
| Father's/Husband's Name | : சுப்ரமணியன் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of** 22/06/2022

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது சோழபுரம், புதுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சோழபுரம் புதுத்தெருவில் கடந்த 17/03/2011 காலை 10.00 மணியளவில் முன்தினம் ராமச்சந்திரன், பாஸ்கர் ஆகியோருக்கிடையில் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக அங்கு நடந்த சண்டை சம்மந்தமாக திருப்பனந்தாள் போலிசார் அங்கு விசாரணை செய்து கொண்டிருந்தனர். என்னையும் அழைத்து விசாரணை செய்து, அதற்காக கையொப்பம் வாங்கி கொண்டனர். (**மேற்படி பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

கடந்த 17/03/2011 அன்று காலை 10.00 மணியளவில் நானும், காசிலிங்கம் என்பவரும் சோழபுரம் புதுத்தெரு காளியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது, திருப்பனந்தாள் போலிசார் முன்தினம் இரவு ரமேஷ் என்பவருக்கும், பாஸ்கர் என்பவருக்கும் அங்கு நடந்த சண்டை சம்மந்தமாக விசாரணை செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்து பார்வை மகசரில் எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள் என்றும், போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க அரசு தரப்பு சாட்சியத்தில் இருந்து விலகி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1,3 எதிரிகள் சார்பில் அவரது வழக்கறிஞர் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 87/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : PW-4 | Village: |
| Name | : பீமன் | Age : |
| Father's/Husband's Name | : பிச்சை | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/06/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது சோழபுரம், புதுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2011 ம் வருடம் ஒருநாள் இரவு 10.00 மணியளவில் சோழபுரம் புதுத்தெருவில் இருந்து காளியம்மன் கோவிலுக்கு நான் சென்றிருந்த போது, ரமேஷ் என்பவர் பாஸ்கர் என்பவரிடம் பணம் கேட்டு அங்கு வந்திருந்தார். அப்போது சுகுமார் என்பவர் அரிவாளால் ரமேஷின் முதுகில் வெட்டினார். பாஸ்கர் என்பவர் ரமேஷை காலால் உதைத்து கீழே தள்ளினார். பாக்கியராஜ் என்பவர் ரமேஷை அடித்தார். பின்னர் அங்கிருந்தவர்கள் அடிபட்ட ரமேஷை திருப்பனந்தாள் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1,3 எதிரிகள் சார்பில் அவரது வழக்கறிஞர் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 87/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-3 | Village: | |
| Name | : நாகலிங்கம் | Age | : |
| Father's/Husband's Name | : பன்னீர் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/06/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது சோழபுரம், புதுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் கேட்டரிங் சர்வீஸ் தொழில் செய்து வருகிறேன். கடந்த 16/03/2011 அன்று இரவு 10.10 மணியளவில் சோழபுரம் புதுத்தெரு உள்ள மாரியம்மன் கோவில் அருகே நான் சென்று கொண்டிருந்த போது, ரமேஷ் என்பவரை எதிரி பாஸ்கர் என்பவர் காலால் எட்டி உதைத்தார். எதிரி சுகுமார் என்பவர் அவரை அரிவாளால் முதுகில் வெட்டினார். எதிரிகள் பாக்கியராஜ் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர் கத்தியை காட்டி ரமேஷ் என்பவரை மிரட்டினார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

1,3 எதிரிகள் சார்பில் அவரது வழக்கறிஞர் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 87/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : PW-2 | Village: |
| Name | : சேகர் | Age : |
| Father's/Husband's Name | : தையான் | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/06/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது சோழபுரம், புதுத்தெருவில் வசித்து வருகிறேன். நான் சிமெண்ட் ஒர்க்ஸ் தொழில் செய்து வருகிறேன். கடந்த 16/03/2011 அன்று இரவு 10.00 மணியளவில் சோழபுரம் புதுத்தெரு முனையில் உள்ள காளியம்மன் கோவில் அருகே நான் சென்று கொண்டிருந்த போது, ரமேஷ் என்பவரை எதிரி பாஸ்கர் என்பவர் காலால் உதைத்து கீழே தள்ளிவிட்டார். எதிரி சுகுமார் என்பவர் அவரை அரிவாளால் முதுகில் அடித்தார். எதிரிகள் பாக்கியராஜ் மற்றும் ராமச்சந்திரன் ஆகியோர் கத்தியை காட்டி ரமேஷ் என்பவரை உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். ஊரில் இருந்தவர்கள் சண்டையை மறித்து அடிபட்ட ரமேஷ் என்பவரை திருப்பனந்தாள் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1,3 எதிரிகள் சார்பில் அவரது வழக்கறிஞர் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | |
|---|---|---|
| Calender | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : CC 87/2019 | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : PW-1 | Village: |
| Name | : ரமேஷ் | Age : |
| Father's/Husband's Name | : வீரையன் | Taluk : |
| Nationality | : Indian | Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 22/06/2022**

சாட்சியை திருப்பனந்தாள் தலைமை காவலர் திருமதி டென்னிசா மேரி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது குமரன்குடியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் பாஸ்கர், சுகுமார்,. பாக்கியராஜ், ராமச்சந்திரன் ஆகியோரை எனக்கு தெரியும். கடந்த 16/03/2011 அன்று இரவு 10.00 மணியளவில் நான் சோழபுரம் கடைத்தெருவிற்கு வீட்டிற்கு ஜாமான் வாங்குவதற்காக சென்று கொண்டிருந்தபோது, பாஸ்கர் என்பவர் என்னை அழைத்து பணம் தருகிறேன் வா என்று கூறினார். எதிரி பாஸ்கர் அழைத்தன் பேரில் நான் சோழபுரம் புதுத்தெருவில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தேன். அப்போது எதிரிகள் பாஸ்கர், சுகுமார், ராமச்சந்திரன், பாக்கியராஜ் ஆகியோர் அங்கு வந்தார்கள். எதிரி பாஸ்கர் என்னை கீழே தள்ளி காலால் மிதித்தார். எதிரி சுகுமார் அரிவாளை பிரட்டி வைத்து எனது முதுகில் அடித்தார். அதில் எனக்கு முதுகில் கீறல் காயம் ஏற்பட்டது. எதிரி ராமச்சந்திரன் கத்தியால் என்னை குத்த

வந்தார். பின்னர் கத்தியை காட்டி இங்கிருந்து ஓடி விடு இல்லையென்றால் உன்னை கொன்றுவிடுவேன் என மிரட்டினார். பின்னர் ரோட்டில் சென்ற ஒரு நபர் என்னை திருப்பனந்தாள் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். திருப்பனந்தாள் போலிசார் என்னை விசாரணை செய்து, காவல் நிலையத்தில் வைத்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**மேற்படி சாட்சி புகார் வாக்குமூலம் அளித்தது குறித்து மட்டும் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.**

புகார் வாக்குமூலம் எங்கு வைத்து வாங்கினார்கள் என்றால் காவல் நிலையத்தில் வைத்து தான் வாங்கினார்கள். புகார் வாக்குமூலத்தை மருத்துவமனையில் வைத்து கொடுத்துவிட்டு தற்போது ஞாபகமின்மையால் காவல் நிலையத்தில் வைத்து அளித்ததாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் எங்கு வைத்து வாங்கினார்கள் என்பது தற்போது எனக்கு ஞாபகமில்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1,3 எதிரிகள் சார்பில் அவரது வழக்கறிஞர் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்து, அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**